
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 2 | ஜூன் 1989 | இதழ் 6

பரிசுத்த



வேதாகமம்

வெளியிடுவோர் :

**ஈரோடு கிறிஸ்துவின் சபையார்,**

**2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.**

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க் கண்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்,

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638002.

நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை
,, : ,, 11-00—12-00...ஞாயிறு பள்ளி
,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை
செவ்வாய் : மாலை 7-15—8-30...ஜெபக்கூட்டம் (மாதவக்காடு)
புதன் : மாலை 3-30—5-00 சகோதரிகள் ஐக்கிய கூட்டம் (ஒருவாரம்விட்டு ஒருவாரம்)
வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு
சனி : மாலை 7-00—9-00...மன்றாட்டு ஜெபம்

## இதழின் உள்ளே...


1. கள்ளனும் கள்ள உபதேசங்களும்
2. தேவன் மனிதன் மூலமாக செயல் படுகிறார் 5
3. மண்ணரசும் விண்ணரசும் 9
4. தீங்கனுபவி; சுவிசேஷகனுடைய வேலையைச் செய் 11
5. 20-ஆம் நூற்றாண்டு ஊழியர்களுக்குப் பத்து கேள்விகள் 14
6. ருசித்துப் பாருங்கள் 24
7. இயேசுவின் சீடர்கள் பெயரும் மாற்றுப் பெயர்களும் 28

# THIRUMARAI AASAAN

**Editor :**
E. Z. SELVANAYAGAM

Honorary Editor
J. C. CHOATE

**Published by Church of Christ**
**2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu. India**

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol 2. June 1989 Issue 6.

ஆசிரியவுரை

# கள்ளனும் கள்ள உபதேசங்களும்

தற்காலத்தில் மக்கள் எல்லாவற்றையும் நேர் வழியைவிட குறுக்கு வழியில் எளிதில் அடைய முடியும் என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். படிக்காமலே பாஸ், உழைக்காமலே ஊதியம், தகுதியில்லாமல் பதவி இப்படி எத்தனையோ...வர வர விதைக்காமலே அறுவடை செய்ய முடியும் என்று சொன்னால்கூட அதையும் நம்பி ஏற்றுக்கொள்வார்கள் போல் தெரிகிறது.

இம்மாதிரியான சிந்தனையோட்டம் மார்க்க விஷயத்தையும் விட்டு வைக்கவில்லை. மனந்திரும்பாமலேயே இரட்சிப்பு, கர்த்தருடைய சித்தம் செய்யாமலே மோட்சப் பிரவேசம் சாத்தியமா? என்பன போன்ற சிந்தனைகள் மக்கள் மனதிலே நெளிகின்றன. இதை மோப்பம் பிடித்துக் கொண்ட சில பேர்வழிகள் அவைகளை நாங்கள் பெற்றுத் தருகிறோம். அதற்கு நாங்கள்தான் மொத்த விநியோக உரிமையாளர் என்று உத்தரவாதம் அளித்து அவர்களுக்கு ஒரு போலி திருப்தியை ஏற்படுத்தி விட்டு அதற்கு ஈடாக இழிவான ஆதாயங்களைப் பெற்று சௌகரிய-மான வாழ்க்கை நடத்தி உலா வருகின்றனர். அவர்கள் வசதியாக வாழ்வதைப் பற்றி நமக்கு ஒன்றும் பொறாமை இல்லை. ஆனால் அதனால் விளையும் விபரீதங்களை எண்ணும் போது துக்கப்படாமல் இருக்க முடியாது.

பொதுவாகவே மனந்திரும்பின வாழ்க்கையை மேற்கொள்ள முடியாதவர்களும், ஆன்மீக விஷயங்களில் அக்கறையற்றவர்களும் இப்படிப்பட்ட பேர்வழிகளின் அரைகுறைப் போதனைகளைக் கேட்டு விட்டு தேவ வசனத்தை மேலும் அசட்டை செய்கிற நிலைமை உருவாகிறது.

உதாரணமாக ஞானஸ்நானம் இரட்சிப்புக்கு அவசியம் என்ற காரியத்தை விளக்குவதற்கு நாம் தேவ வசனங்களை ஆதாரமாக எடுத்து வைக்கும் பொழுது இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட கள்ளன் எந்த ஞானஸ்நானம் பெற்றான்? அவனை இன்று நீ என்னுடனே கூட பரதீசிலிருப்பாய் என்று ஆண்டவர் ஏற்றுக்கொள்ள வில்லையா? என்று எதிர்க் கேள்வி போட்டு விட்டு நம்முடைய பதிலுக்குக்கூடக் காத்திராமல் விருட்டென்று எழுந்து சென்றுவிடுவர். டி நபர்கள் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து ஏதாவது ஒரு வகை ஆதாயத்தை எதிர்ப்பார்த்து முகஸ்துதிக்காக எதையாவது சொல்லி வைத்திருப்பார்கள். அதை அவர்கள் குரங்குப் பிடியாக பிடித்துக் கொண்டு நாம் எடுத்து வைக்கிற எந்த நியாயத்தையும் ஏற்றுக்கொள்ள மறுத்து விடுவார்கள்.

அந்த நபருடைய விசுவாசக் கப்பலை கவிழ்த்தது எது? இரட்சிப்புக்கு விசுவாசம் மட்டும் போதும். கள்ளன் ஞனஸ்நானம் இல்லாமலே இரட்சிக்கப்பட்டதுபோலே நாமும் ஞானஸ்நானம் இன்றி இரட்சிப்படையலாம் என்ற தவறான உபதேசம் தான். இயேசுகிறிஸ்து விரும்பினால் யாரையும், எப்படியும் இரட்சிக்க முடியும் என்பதில் நமக்கு ஒன்றும் சந்தேகம் கிடையாது. சொல்லப்போனால் விசுவாசம் இல்லாதவரைக்கூட அவரால் இரட்சிக்க முடியும். மத்தேயு ஒன்பதாம் அதிகாரத்திலும், மாற்கு இரண்டாம் அதிகாரத்திலும் திமிர்வாத நோயாளி ஒருவனுடைய பாவங்களை மன்னித்த சம்பவம் ஒன்றை வாசிக்கிறோம் (மத்.9:2; மாற். 2:1-5). அந்த நோயாளிக்கு விசுவாசம் இருந்ததா? இல்லையா? தெரியவில்லை. ஆனால் கொண்டுவந்தவர்களுடைய விசுவாசத்தைப் பாராட்டி நோயாளியின் பாவத்தை மன்னித்ததாக வசனங்கள் கூறுகின்றன. அப்படியானால் ஒருவருக்காக மற்றவர் விசுவாசித்தால் கூடப் போதும் என்று சொல்லலாமா? சிந்தியுங்கள்.

மாற்கு 16:16. மற்றும் எபி 11:6. ஆகிய வசனங்களைக் கவனியுங்கள். இரட்சிக்கப்படுவதற்கு ஒவ்வொருவரிடத்திலும் விசுவாசம் காணப்பட வேண்டும் என்று கூறுகிறது. ஆனால் திமிர்வாதக்காரனிடத்தில் விசுவாசம் இருந்ததோ இல்லையோ அவனை இரட்சித்திருக்கிறார். அந்த சம்பவத்தை எடுத்துக்காட்டாக வைத்துக் கொண்டு நான் விசுவாசிக்கமாட்டேன். ஆனால் நான் இரட்சிப்பு அடைய வேண்டும் என்று வாதிட முடியுமா? கூறப்பட்டுள்ள சம்பவங்களைத் தொகுத்து அதன் முடிவான கருத்து என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும்.

**கள்ளன் பழைய உடன்படிக்கையின் கீழ் வாழ்ந்து மரித்தான்:**

கள்ளன் பழைய உடன்படிக்கையின் கீழ் வாழ்ந்து மரித்தான். இயேசு மரிக்கும் வரையில் அந்த உடன்படிக்கை அமுலில் இருந்தது. புதிய ஏற்பாடு அமுலுக்கு வருவதற்கு இயேசு மரித்தாகவேண்டும்.

அதைப் பற்றிய விளக்கத்தை எபி 9:15-17. வசனப்பகுதியில் பார்க்கலாம். இரட்சிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் தேவை என்றகட்டளையை இயேசு உயிரோடெழுந்த பிறகு தான் கொடுத்தார் (மத் 28:18-20; மாற்கு 16:15, 16; அப் 2:38). ஆகவே பழைய உடன்படிக்கையின் காலத்தில் வாழ்ந்த கள்ளனுடைய இரட்சிப்பு, புதிய உடன்படிக்கையின் கீழ் வாழ்கின்ற நமக்குப் பொருந்தாது. நாம் இயேசுகிறிஸ்துவின் கட்டளைப்படி விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றாலே இரட்சிப்படைய முடியும்.

சரி, இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியம் என்கிறீர்களே அதை நான் சிறு குழந்தையாக இருக்கும்போதே பெற்றுக்கொண்டேன். பின்னர் அதை உறுதிசெய்து (Confirmation) திடப்படுத்துதலும் பெற்றிருக்கிறேன் என்று வாதம் செய்வர். தர்மசங்கடமான நிலை, பிசாசு என்னென்ன மாதிரியான—தடைக் கற்களை வழி நெடுக வைத்திருக்கிறான், பாருங்கள் மாற்கு 16:15, 16-ல் 'விசுவாசித்து' என்று கூறி அப் 2-38-ல் 'மனந்திரும்பி' என்பதையும் சேர்க்கப்பட்டிருப்பதை நீங்களே உங்கள் வேதாகமத்தை எடுத்து வாசித்துப்பாருங்கள்.

ஒரு கேள்வி? சிறு குழந்தைக்கு பரலோகத்தின் இரகசியங்களைச் சொல்லி விசுவாசிக்க வைக்க முடியுமா? அதற்குத்தானே திடப்படுத்துதல் என்று ஓர் விளக்கம் வருகிறது. முன்னொரு காலத்தில் நமது நாட்டில் பால்ய விவாகம் என்ற ஒரு முறை இருந்தது. அதையே தவறு என்று சட்டம் இயற்றித் தடுத்து விட்டனர். நாம் இன்னும் அதே போன்ற கஷ்டத்தை ஆன்மீக வாழ்வில் விளைவிக்கும் குழந்தை ஞானஸ்நானத்தை இன்னும் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம். அதற்கு எங்கே முன் உதாரணம்? எங்கே பொருள்? முன் உதாரணமும் இல்லாமல் அர்த்தமும் இல்லாத ஒன்றை வெளிச்சத்தின் பிள்ளைகள் என்று சொல்லிக்கொள்ளுகிற நாம் இன்னும் செய்துகொண்டிருக்கலாமா? தவறு செய்து கொண்டிருந்தோம். அதைப் பற்றித் தேவனுக்கு வருத்தம் இல்லை. ஆனால் தவறு என்று தெரிந்த பிறகு விட்டு விடாமல் சப்பைக் கட்டுக் கட்டிக் கொண்டிருப்பது தேவனுக்குப் பிரியமாயிருக்குமா? அப் 17:30.

ஒருவேளை குழந்தைகள் கிறிஸ்தவத்தை மறுதலித்து விடக்கூடாது ஆகவே அவர்களை குழந்தைப் பருவத்திலிருந்தே பழக்குவிக்கவேண்டும் என்று விரும்புகிறீர்கள் என்று நம்புகிறேன், உங்கள் பிள்ளைப் பாசமும், கிறிஸ்தவப் பற்றும் தேவ சித்தத்துக்கு எதிராகச்செயல்படும்படி உங்களை ஏவுகிறதைக் கவனிக்க வில்லையா? எது முக்கியம்? தேவனுக்குக் கீழ்படிவதா; நம்முடைய பாரம்பரிய வைராக்கியமா? 1 சாமு 15:22, 23. ஏசாயா 66:2; மத் 15:8,9.

அதையும் தாண்டி வருவோமானால் இன்னும் ஒரு பாராங்கல். தெளித்தலும், ஊற்றுதலும் கூட ஞானஸ்நானம் தான்; முழுதித்தான்

ஆக வேண்டும் என்று கட்டாயம் இல்லை என்பர். தெளித்தல் என்ற முறை வேதாகம் எங்கும் தேடி வாசித்தாலும் இல்லவே இல்லை. ஆனால் இயேசுவின் ஞானஸ்நானத்திலிருந்து, கொடுக்கப்பட்ட அனைத்து ஞானஸ்நானமும் முழுக்கு என்று தான் வேதாகமம் கூறுகிறது. இருந்தபோதிலும் இரண்டாயிரம் ஆண்டுகளாகியும் அந்தத் தவறைத் திருத்திக் கொள்ள விரும்பாத ஆயிரக்கணக்கான மக்கள் தாங்கள் திருமுழுக்குப் பெற்று விட்டோம் என்றே எண்ணிக் கொண்டிருக்கின்றனர் அறியாமை, நிர்விசாரம் என்னும் ஆயுதங்களை பிசாசு எவ்வளவு திறமையாக பயன்படுத்துகிறான் என்று நினைக்கும் போது அவனுடைய ஆற்றலை வியக்காமல் இருக்க முடியாது.

1. மூல மொழியாகிய கிரேக்கத்தில் (Baptizo) (பாப்டிஸோ) என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அகராதியில் அதன் அர்த்தம் மூழ்கடித்தல், அமிழ்த்துதல் என்று கொள்ளலாம்.

2. யோவான் தண்ணீர் மிகுதியாயிருந்த இடத்தில் ஞானஸநானம் கொடுத்து வந்தான் யோவான் 3:23.

3. ஞானஸ்நானம்—அடக்கம் ரோமர் 6:3-5.

4. மறு ஜென்ம முழுக்கு தீத்து 3:5.

இப்படி எத்தனையோ தவறான உபதேசங்கள் மெல்ல மெல்ல முதலாம் நூற்றுண்டு மெய்க் கிறிஸ்தவத்துக்குள் நுழைந்து கிறிஸ்தவத்தின் தூய்மையைக் கெடுத்து மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட பல்வேறு மதங்களில் இதுவும் ஒன்று என்ற நிலைக்குத் தாழ்த்திவிட்டது.

நண்பர்களே! எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று பவுல் கூறிய அறிவுரையை, (1 தெச 5:21) மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்த பெரோயா பட்டணத்தாரைப் பின்பற்றி (அப் 17:11) நாமும் ஆரோக்கியமான உபதேசத்தை ஏற்றுக்கொண்டு தவறுகளைக் களைந்தெறிவோம். இதில் வெட்கப்பட ஒன்றுமில்லை. சத்துருவாகிய சாத்தான், மிகத் தந்திரமும் அனுபவமும் உள்ள எதிரி, நம்மை பல வித்த்திலும் ஏமாற்றி வஞ்சித்து விடுகிறான் என்பது ஆண்டவருக்குத் தெரியும். ஆகவே எப்பொழுது நாம் உண்மையைத் தெரிந்துகொண்டு அவரிடத்திற்கு திரும்பி வந்தாலும் நேசக்கரம் நீட்டி நம்மை ஏற்றுக்கொள்வார்.

அப்போஸ்தலர்களுடைய உபதேசங்களை மட்டுமே கைக்கொண்டு, மனித ஞானத்தால் கறைப்பட்டிருக்கிற கிறிஸ்தவத்தைத் தூய்மைப் படுத்துவோம். வேதம் விளம்பினதை விவரித்துச் சொல்வோம். வேதம் விளம்பாததற்கு உடன்படவே மாட்டோம் என்று சூளுரைத்து ஒன்றுபடுவோம்.

E. Z. செல்வநாயகம்.

# தேவன் மனிதன் மூலமாக செயல்படுகிறார்

ஆதி காலத்தில் தேவன் மனிதர்களோடுநேரடியாகப் பேசினார். அற்புத அடையாளங்கள் செய்தார்; அவருடைய தூதர்களை தன் சார்பில் பிரதிநிதிகளாக அனுப்பி வைத்தார். பின்னர் காலம் நிறைவேறினபொழுது உலகத்தின் பாவங்களுக்காக மரிக்கும்படி தன்னுடைய ஒரே பேறான குமாரனை அனுப்பி வைத்தார்.

தேவன் தமது சித்தத்தை வெளிப்படுத்த பலவிதத்தில் மனிதக் குலத்தோடு தொடர்பு கொண்டாலும் பெரும்பாலும் மனிதர்களைக் கொண்டே செயல்பட்டார். நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு யோசேப்பு, மோசே, தாவீது, தானியேல், மற்றும் பழைய ஏற்பாட்டுக் காலத்து மனிதர்கள் பலரை உதாரணமாகச் சொல்லலாம். எஸ்தர் போன்ற பெண்மணிகளையும் கூட பயன்படுத்தியிருக்கிறார்.

கீழ்ப்படியாமை காரணமாக, இஸ்ரவேலுக்கு அரசனாயிராதபடி சவுலைத் தள்ளிப் போட்டு தாவீது என்னும் இளைஞனை அரசனாக்கினார். இந்த துர்ச்செய்தியை சாமுவேல் தீர்க்கதரிசி கீழ்க்கண்ட வார்த்தைகள் மூலமாக சவுல் அரசனுக்கு தெரிவிக்கிறார். ''இப்பொழுதே உம்முடைய ராஜ்யம் நிலை நிற்காது. கர்த்தர் தம்முடைய இருதயத்துக்கேற்ற ஒரு மனுஷனைத் தமக்குத் தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய ஜனங்கள் மேல் தலைவனாக இருக்கக் கட்டளையிட்டார். கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையை நீர் கைக்கொள்ளவில்லையே'' (1 சாமு 13:14) இதைப் பவுல் அப் 13:22ல் கீழ்வருமாறு எழுதுகிறார் ''பின்பு அவர் அவனைத் தள்ளி தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தி ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்.''

என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன் என்பதின் பொருள் என்ன? தாவீது தேவனை முழுமனதுடன் நேசித்து, அவர் கட்டளைக்குப் பணிந்து அவருக்கு பிரியமாய் நடந்துகொண்டான் என்று கொள்ளலாம் இளைஞனாக இருக்கும்போதேஅவன் அரக்கன் கோலியாத்தை வென்றதின் மூலம் புகழ்பெற்றான். பின்னர் இஸ்ரவேலின் ராஜாவாகி அந்த நாட்டின் அந்தஸ்தை உயர்த்தினான். அவனிடத்தில் சில பலவீனங்கள் குறைகள் இருந்தன. ஆனால் தன் பாவங்களுக்காக மெய் மனஸ்தாபப்படும் இயல்பும் இருந்தது. அவன் எழுதிய சங்கீதங்களை வாசிக்கும் பொழுது, அவனது ஆழ்ந்த பக்தியையும், கடவுளின் அன்பிலும் கிருபையிலும் வல்லமையிலும் அவனுக்கு இருந்த நம்பிக்கையையும் ஈடுபாட்டையும் கவனிக்கலாம் உண்மையாகவே அவன் தேவனுடைய இருதயத்துக்கேற்ற மனிதன் என்பதில் சந்தேகமில்லை.

இயேசு இவ்வுலகில் வாழ்ந்த நாட்களிலும் கூட யோசேப்பு, மரியாள், யோவான் ஸ்நானகன், அப்போஸ்தலர் மற்றும் பலரைப் பற்றி புதிய ஏற்பாட்டில் வாசிக்கிறோம். யோவான் எழுதிய நற்செய்தி நூலில் அடிக்கடி இயேசுவுக்கு அன்பான சீஷன் என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. உதாரணத்துக்கு, ''அந்த சமயத்தில் அவருடைய சீசரில் இயேசுவுக்கு அன்பானவனாயிருந்த ஒருவன் இயேசுவின் மார்பில் சாய்ந்து கொண்டிருந்தான் '(யோவான்' 13:23) இயேசுவின் சிலுவையினருக்கே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்று கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாலிருந்த சீஷனையும் கண்டு தம்முடைய தாயை நோக்கி ஸ்திரீயே இதோ உன் மகன் என்றார்.

பின்பு அந்த சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார். அந்நேர முதல் அந்த சீஷன் அவளைத் தன்னிடமாய்ச் சேர்த்துக் கொண்டான்.'' (யோவான் 19:25:27)

இயேசு மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்த பிறகும் ஒரு சமயத்தில் ''வாரத்தின் முதல்நாள் காலையில், அதிக இருட்டோட மகதலேனா மரியாள் 'கல்லறையினிடத்திற்கு வந்து கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப் போட்டிருக்கக் கண்டாள்.

உடனே அவள் ஓடி, சீமோன் பேதுருவினிடத்திலும், இயேசுவுக்கு அன்பாயிருந்த மற்ற சீஷனிடத்திலும் போய் கர்த்தரைக் கல்லறையிலிருந்து எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள் அவரை வைத்த இடம் எங்களுக்கு தெரியவில்லை.'' (யோவான் 20:1,2) என்று வாசிக்கிறோம் மேலும்,யோவான் 21:7ல் ஆதலால் இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன் பேதுருவைப் பார்த்து: 'அவர் கர்த்தர் என்றான்.' என்றும் யோவான் 21:20ல் 'பேதுரு திரும்பிப் பார்த்து இயேசுவுக்கு அன்பாயிருந்தவனும் இராபோஜனம் பண்ணுகையில் அவர் மார்யிலே சாய்ந்து, ஆண்டவரே, உம்மைக் காட்டிக் கொடுக்கிறவன் யார்என்று கேட்டவனுமாகிய சீஷன் பின்னே வருகிறதைக் கண்டான்' என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது

இயேசுவால் அதிகமாய் நேசிக்கப்பட்ட சீஷன் யோவான் தான் என்பதற்குப் பல தடயங்கள் இருக்கின்றன. இந்நூலை எழுதியவர் யோவான் ஆனபடியால் தன்னைப் பற்றிப் பெருமையாக தானே குறிப்பிட்டுக் கொள்ள விரும்பாமல் இருந்திருக்கலாம். இயேசுவின் தாயாரை கவனித்துக் கொள்ளும் பொறுப்பை யோவானிடத்தில் ஒப்படைத்தது கூட அவர் அவன் மீது வைத்திருந்த அன்பையும், நம்பிக்கையையும் காட்டுகிறது. ஒரு தகப்பன் தன் மகன் மீது பாராட்டுகிற அன்புக்கு ஒப்பான அன்பு யோவான் மேல் இயேசுவுக்கு இருந்தது என்று கூறலாம்

அதனுல் மற்ற சீஷர்களையோ, அல்லது மற்றவர்களையோ இயேசு நேசிக்கவில்லை என்று பொருள் அன்று இயற்கையாகவே சிலருக்கு சிலர் மீது அதிக ஒட்டுதலும், நெருக்கமான நட்பும் உண்டாவது உண்டு.

புதிய ஏற்பாடு எழுத்து வடிவில் உருவாவதற்கு முன்பு, பேதுரு, பவுல், ஸ்தேவான், பிலிப்பு, தீமோத்தேயும் தீத்து, ஆக்கில்லா-பிரிஸ்கில்லா மற்றும் பல குறிப்பிடத்தக்க மனிதர்கள் சிறப்புடன் இருந்தார்கள். காலகட்டத்தில் கர்த்தர் சவுலுக்குத் தரிசனம் ஆனுர். தேவதூதர்கள் சில சிறப்புப் பணிகளை நிறைவேற்ற அனுப்பப் பட்டனர். அப்போஸ்தலருக்கு பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டார். அப்போஸ்தலர்கள் கைகளை வைப்பதின் மூலமாக சில அற்புத அடையாளங்கள் செய்யவும் அந்நிய பாஷைகளில் பேசவும், வேதாகமத்தை எழுதவும் வரங்கள் கொடுக்கப்பட்டிருந்தன.

எபி 1:1,2 கூறுகிறபடி தேவன் கடைசி நாட்களில் குமாரன் மூலமாகப் பேசினுர். அவைகளை பரிசுத்த ஆவியின் துணை கொண்டு பரிசுத்த மனிதர்கள் எழுதி வைத்திருக்கிறுர்கள் 2 பேது 1:21 அதன் பிறகு தேவதூதர்களே வந்து, சொல்லப்பட்டிருந்த நற்செய்திக்குப் புறம்பாக எதையாவது மாறுபாடாக சொன்னுல் அவர்கள் சபிக்கப்பட்டவர்களாக இருப்பர். (கலா 1:6-9) சொல்லப்பட்டிருக்கிற காரியங்களோடு ஒன்றைக் கூட்டவும் கூடாது. குறைக்கவும் கூடாது. (வெளி 22.18-19)

இன்றைக்கு தேவன் மனிதர்கள் மூலமாக செயல்படுகிறுர். அதாவது அவர் எழுதிக் கொடுத்திருக்கிற வார்த்தையின் மூலமாகப் பேசுகிறுர். மக்கள் கிறிஸ்துவின் அழைப்பைக் கேட்டு அவரிடத்தில் வரலாம். கிறிஸ்து எப்படி அழைக்கிறுர் என்றுல் தம்முடையவசனத்தின் மூலமாக. மத் 11:28-30.

இப்பொழுது தேவனே, கிறிஸ்துவோ நம்மிடத்தில் நேரடியாகப் பேசுவதில்லை அவர் இப்பொழுது தம்முடைய பணியினை நிறைவேற்ற தேவதூதர்களை அனுப்புவதுமில்லை. அவர் நமக்கு அற்புத அடையாளங்களை நடப்பிக்கும் பரிசுத்தஆவியின் வல்லமையும் தருவதில்லை. அவைகளை எல்லாம் தேவைக்கேற்ப செய்ய வேண்டிய சந்தர்ப்பங்களில் செய்து முடித்து விட்டார். இப்பொழுதோ நற்செய்திச் செல்வம் மண்பாண்டங்களாக்கிய மனிதர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. (2 கொரி 4:7) அதுவே இரட்சிப்புக்கு தேவபெலனுயிருக்கிறது. ரோமர் 1:16.

தொன்று தொட்டு இந்நாள் வரையிலும், தேவனுடைய சத்தத்துக்கு செவி கொடுத்து, அவருடைய சித்தத்துக்கு கீழ்ப்படிபவர்களைக் கொண்டு தம்முடைய பணியை நிறைவேற்றி வருகிறுர். அவர்கள் மூலமாய் எவ்வளவு பெரிய காரியங்களைச்செய்திருக்கிறுர்! ஏன் அவர்களை

மட்டும் தெரிந்து கொண்டார்? ஏன் அவர்களை மட்டும் உபயோகித்தார்? அந்த நன்மக்கள் ஏன் கடவுளைத் தெரிந்து கொண்டார்கள்? ஏன் அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்தார்கள்?

தேவன் உம்மையும் என்னையும் கூட உபயோகிப்பார். நம்மை மட்டும் அல்ல. அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கிற எவரையும் உபயோகித்துப் பெரிய காரியங்களைச் செய்வார். மோசேயைப் போல, தாவீதைப் போல, தானியேலைப் போல, பவுலைப் போல, பேதுருவைப்போல நாமும் கூட அவருடைய சித்தத்தை அறிந்து செயல்பட நம்மை முற்றிலுமாக ஒப்புக் கொடுத்தால் அவருக்காக பெரிய காரியங்களைச் செய்ய நம்மைத் தெரிந்து கொள்வார்.

நாம் யார்?. நாம் தூசியும் குப்பையுமாக இருக்கிறோம் ஆண்டவரால் உபயோகிக்கப்பட்ட மற்றவர்களைக் கூடக் கவனித்துப் பாருங்கள். கடவுள் அவர்களை அழைத்து உயர்த்துவதற்கு முன்பு அவர்கள் மிகச் சாதாரணமான மக்கள் தான். ஆகவே நாமும் அவர்களைப் போல அவருக்கு முற்றிலும் அர்ப்பணித்து ஒப்புக் கொடுப்போமானால் அவர் நம்மையும் வல்லமையுமான பிரசங்கிகளாகவும், போதகர்களாகவும், மூப்பர்களாகவும், ஊழியர்களாகவும் மாற்ற அவருக்கு முடியும். கர்த்தருடைய வல்லமையைச் சந்தேகிக்காதே; அதே போல உன்னைக் கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்ய உபயோகிப்பார் என்பதையும் சந்தேகிக்காதே. ஆனால் அவரை ஏற்றுக்கொண்டு அவர் உன் இருதயத்தில் வாசம் செய்ய அனுமதிக்க வேண்டும்.

தேவனுடைய வசனங்களை வாசித்துத் தியானி. சபைக் கூட்டங்களைத் தவற விடாதே. சபையின் பணிகளில் பங்குகொள்; எல்லாவற்றிற்கும் மேலாக உன்னையே கர்த்தருக்கு ஒப்புக் கொடு. அவருக்கு உண்மையாயிரு. கர்த்தருக்காகப் பேசு. உன் குடும்பத்தை விசுவாசத்துக்குள் கொண்டுவா. கர்த்தருக்கு எந்தஅளவுக்கு ஒப்புக்கொள்கிறாயோ அந்த அளவு அவர் உன்னை உபயோகித்து பெரிய காரியங்களைச் செய்வார்.

அநேக கிறிஸ்தவர்கள் செயல்படுவதேயில்லை. செயல்பட வேண்டும் என்ற ஆர்வமுமில்லை. கர்த்தருக்காக ஏதேனும் செய்ய வேண்டும் என்ற தாகம் இல்லை. இப்படியே தொடர்ந்து வாழ்வார்களானால் ஆவிக்குரிய மரணம் சம்பவிக்கும் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிவிடுவர். ஏதோ செடியோடு ஒட்டிக் கொண்டிருக்கிற கொடியைப் போல் இருந்தாலும் கனி இருக்காது கர்த்தருக்குள் நம்முடைய நிலை எப்படி இருக்கிறதோ அதைப் பொறுத்துத் தான் நம்முடைய ஆசீர்வாதம் இருக்கும். தேவன் தன் வேலைகளை இன்றும் மனிதரைக் கொண்டுதான் செய்கிறார். நாம் அவருடைய மக்கள். நாம் நம்மை அவருடைய பணிக்கு ஒப்புக் கொடுத்தால் அவர் நம்மைப் பெரிய காரியங்களைச் செய்ய பயன் படுத்துவார்.

J. C. சோட்.

# மண்ணரசும் விண்ணரசும்

மண்ணுலக ஆட்சியாளர்கள் தங்கள் அதிகாரத்தை நாடுகளை வெல்வதற்கும், மக்களைக் கொல்வதற்கும் பயன்படுத்துகிறார்கள். ஆனால் இயேசு தமது அதிகாரத்தை மக்களுக்கு ஆன்மீக விடுதலை தரவும் அவர்களை இரட்சிக்கவும் பயன்படுத்துகிறார்.

அலெக்சாந்தரும், சீசரும், நெப்போலியனும், ஹிட்லரும் தங்கள் எதிரிகளை வெட்டி வீழ்த்துவதின் மூலம் அகில உலகத்தையும் தங்கள் ஆட்சிக்குள் கொண்டு வர முயன்றனர். ஆனால் இயேசு பெருமானோ தமது எதிரிகள் தம்மை இகழ்ந்து பரிகசித்து, அடித்துச் சித்திரவதை செய்து சிலுவையில் அறையுமாறு ஒப்புக்கொடுத்ததின் மூலம் மாபெரும் வெற்றி பெற்றார்.

உலகப் பேரரசர்களாக விரும்பிய அனைத்துப் பேருக்கும் வன்முறையும் ஆக்கிரமிப்பு எண்ணமும் பின்பலமாய் இருந்தன. அதில் மரணத்தின் வித்துகள் இருந்தன. அது அழிவில் முடிந்தன. இயேசு கிறிஸ்துவின் அதிகாரம் அன்பை அடிப்படையாகக் கொண்டது, அன்பு மனித வாழ்க்கையின் மூலாதாரமான கோட்பாடு ஆகும். அது மனித வாழ்க்கையில் அவர்களால் எவ்வளவாக அறியப்பட்டு ஒளியூட்டப்படுகிறதோ அவ்வளவாக அங்கீகாரம் பெற்று வருகிறது.

நாம் மேலே சொன்ன மாமன்னர்களின் அரசுகள் இந்த உலகத்துக்கு உரியவை. அவை கால வெள்ளத்தால் தாக்குண்டு உடைந்து அழிந்து போயின. இயேசுவின் அரசு விண்ணுலகத்தை எட்டுகிறது. அது உடைதலை - பிரிந்து போதலை - பிரிவினையை எதிர்க்கிறது. ஒற்றுமையை வலியுறுத்துகிறது. நூற்றாண்டு நூற்றாண்டாக வெற்றி நடைபோட்டுச் செல்கிறது.

ஒரு சாதாரண கலிலேயே நாட்டுப் புறத்தார், விரல் விட்டு எண்ணக்கூடிய ஏழை எளிய, சமுதாயத்தின் அடித் தட்டில் உழன்ற மக்களைக் கொண்டு இம் மாபெரும் அரசை நிறுவினார் என்று நினைக்கும் போது நமக்கு வியப்பாகவும், மலைப்பாகவும் இருக்கிறதல்லவா? சாவுக்குரிய மனிதர் எவருமே எந்தக் காலத்திலும் வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று உரிமை கொண்டாடவில்லை. கொண்டாடவும் முடியாது ஆயினும் இயேசு கிறிஸ்து அப்படி உரிமை கொண்டாடினார். மத் 28:18. ஏனெனில் அவர் கடவுளின் திருமைந்தர். இப்பொழுதும் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். இம் மாபெரும் பணியை நிறைவேற்ற, கல்வி அறிவில்லாத தமது தொண்டர்களுக்கு பரிசுத்த ஆவியின் பெலத்தைக்

கொடுத்தார். பார் வியக்கும் அற்புத அடையாளங்களை அவர்கள் மூலம் நடப்பித்தார். தம்முடைய உபதேசச் சட்டங்களை பிழையற எழுதி வைக்க பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு ஏவினார்.

இன்று மக்கள் வாழுகின்ற எப்பகுதியிலும் அவருடைய வெற்றிக்கொடி பறக்கிறது. அவருடைய ஆட்சி எல்லை எங்கும் வியாபித்திருக்கிறது. அங்கே அன்புதான் ஆட்சி மொழி.

நண்பனே! அந்த அற்புத ஆட்சியின் கீழ் நீரும் ஒரு பிரஜை ஆக விரும்புகிறீரா? ''வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' இது அந்த மாமன்னரின் அன்புக்குரல் தான்; ஓடோடி வாருங்கள். அவரிடத்தில் வருகிற எவரையும் அவர் புறம்பே தள்ளுவதில்லை.

## பரிசுத்த வேதாகமத்தின் மாண்பு.

பரிசுத்த வேதாகமத்தின் தனித் தன்மைக்கும், சிறப்பிற்கும் முக்கிய காரணம் என்னவென்றால், வேதாகமம் முழுவதிலும் விளங்கும் அதன் செய்தி ஒற்றுமை ஆகும். இந்த ஒற்றுமையே வேதாகமம் பல நூல்கள் அடங்கிய தொகுப்பு என்று அழைக்கப் படாமல் ஒரே நூல் என்று அழைக்கப்படுவதற்குக் காரணமாயிருக்கிறது.

உலகில் தோன்றிய எந்த ஒரு பேரறிஞனின் மிகச் சிறந்த நூல் என்று பாராட்டைப் பெற்றிருந்தாலும் அதை வேதாகமத்தின் அருகில் வைத்தால் அது மனிதனால் கட்டப்பட்ட மிகப் பெரிய கட்டிடம்!ஒன்றினை இமய மலைக்குப் பக்கத்தில் வைத்தால் எப்படித் தோன்றுமோ அப்படித் தோன்றும் என்று அறிஞர் ஜே. ஆர். சீலி என்பவர் வர்ணிக்கிறார்.

## உன்னை நீயே எண்ணிப்பார்!

நாம் யார்? நாம் அழிவில்லாத உயிர்கள். கடவுளுடைய சாயலில் படைக்கப்பட்டவர்கள் ஆதி 1:26-28.

**இங்கே நாம் ஏன் இருக்கிறோம்?**

நம்மை உண்டாக்கின தேவனை-நமது பரம நந்தையை மகிமைப்படுத்துவதற்காக இருக்கிறோம் நாம் இதனைச் செய்வதன் மூலம் நமக்காக நாம் விரும்பும் சமாதானந்தையும் மகிழ்ச்சியையும் பெறலாம்.

**நாம் எங்கே சென்று கொண்டிருக்கிறோம்?** பரலோகத்தில் அல்லது நரகத்தில் நித்தியமாக வாழ்வதற்கு பயணம் செய்து கொண்டிருக்கிறோம்.

# தீங்கனுபவி; சுவிசேஷகனுடைய வேலையைச் செய்

தற்காலத்தில் ஊழியக்காரர்கள் மத்தியில் ஒருவிதமான சோர்வும், மெத்தனமும் காணப்படுகிறது ஏனென்றால் தங்கள் ஊழியத்தில் பெரிய அறுவடையைக் காண முடியவில்லையே என்ற ஏக்கம். ஆதி அப்போஸ்தலர் கால ஊழியத்தில் 'கர்த்தர் அவர்களுடனே கூடக்'' கிரியை நடப்பித்தார்' என்று வாசிக்கிறோம் (மாற் 16:20) அதாவது பரிசுத்த ஆவியானவர் அவர்கள் பிரசங்கிக்கிற வார்த்தையின் மூலம் வல்லமையாய்க் கிரியை செய்து மனிதர்களை அவருடைய இராஜ்ஜியத்தின் பிரஜைகளாக மாற்றி உதவினார். இதைக் குறித்து பவுல் அப்போஸ்தலன் ''எங்கள் சுவிசேவும் உங்களிடத்தில் வசனத்தோட மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்தது 'என்கிறார். 1தெச 1:5. ஊழியர்கள் விரிக்கிற வலையில் பாவிகளாகிய மீன்களை அகப்படச் செய்கிறவர் அவரே. வலைக்குள்ளே போகுமாறு மீன்களை அவர் ஓட்டுவதற்காக நம்முடன் அவர் இல்லையென்றால் நாம் இரவு முழுவதும் தொழில் செய்தாலும், பகலில் பாடுபட்டாலும் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது.

ஒருவர் மிகப் பிரபலமான, வாக்கு வன்மையுள்ள உலகப் பிரசங்கியாக இருக்கலாம். மனிதர்களுடைய பாராட்டையும், கை தட்டலையும் கூட்டப் பெறலாம். ஆனால் ஆத்தும ஆதாயம் இல்லையே காரணம் என்ன? மீன் தனக்குப் போடப்படும் தீனியைக் கண்டு மகிழ்ச்சியோடு அதைச்சுற்றி விளையாடலாம் ஆனால் அவைகளைப் பிடிப்பதற்கு இது மட்டும் போதாது. ஒருவேளை உங்களுக்கு கொடுக்கப்பட்ட தாலாந்துகள் மிகக் குறைவாய் இருக்கிறதினால் இத்தோல்வி என்று சோர்வடைகிறீர்களா? மற்றவர்களோடு ஒப்பு நோக்கும் போது உங்கள் தகுதி குறைவாயிருக்கிறது என்று எண்ணுகிறீர்களா? அப்படியெல்லாம் எண்ணி சோர்ந்து போக வேண்டாம். பேதுருவின் பலவீனமும் கல்விக் குறைவும் உங்களுக்குத் தெரியுமே. இருப்பினும், அவரை தேவன் வல்லமையாய் உபயோகிப்பதை எண்ணிப் பாருங்கள்!

கடவுள் நற்செய்தி செல்வத்தை மண்பாண்டங்களில் வைத்ததின் மூலம் அதிலிருந்து வெளிப்படும் வல்லமை அவருடையது என்பதை தெளிவாக்குகிறார். ஆகவே அப்போஸ்தலன் பவுல் கூறியதைப் போல ''என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பலனுண்டு என்று சொல்லுவோம். பிலி 4:13.

மனிதர்களைப் பிடிக்கும் திருப்பணியைச் செய்வது எவ்வளவு மேன்மையுள்ளது! ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவது எவ்வளவு சிறப்பான தொண்டு அப்போஸ்தர் ''நாம் தேவனுக்கு உடன் வேலை-

யாட்கள்'' என்று பெருமிதப்படுகிறார். கடவுள் நம்மை அவ்வளவாக மேன்மைப் படுத்தியிருக்கும் போது நாம் அவருக்கு எவ்வளவு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆண்டவரே! இம்மட்டும் நீர் என்னை அழைத்ததற்கு நான் எம்மாத்திரம்? என் தகப்பன் குடும்பம் மாத்திரம்? என்று வணங்கிப் பணிந்து நிற்போமாக.

ஆத்தும ஆதாயப் பணிக்கு நாம் எதிர்பார்க்கிற அளவு முன்னேற்-றம் அடையாததற்கு மற்றொரு காரணமும் உண்டு. மக்கள் சாமுவேலைப் போல இருக்கிறார்கள். கடவுள் சாமுவேலை அழைக்கிறார் ஆனால் சாமுவேல் தன்னை அழைப்பது ஏலி என்று எண்ணுகிறான். அது போல நாம் எவ்வளவு ஆழமான சத்தியங்களை உரக்கக் கத்திப் பிரசங்கித்தாலும் அதனை மக்கள் கடவுளுடைய செய்தியாக எண்ணுகிறதில்லை மாறாக அது நம்முடைய கருத்து என்றே நினைக்கிறார்கள் அப்படிப்பட்டவர்கள் நம்மை உதாசீனப் படுத்தலாம். இகழ்ந்துரைக்கலாம் ஆனாலும் கலங்காதே. மார்க்கத்தை அழித்துப் போட நினைத்து வெறித்தனமாக எதிர்த்த சவுலை மாற்றின தேவன் அவர்களையும், அவருக்குசித்த மானால், என்றாவது ஒருநாள் மாற்றிப் போடுவார். நம்பிக்கையோடு போராடுவோம்

துர்நாற்றம் வீசும் சாக்கடையும், சேறும், சகதியும் நிறைந்த அசுத்த நீர் நமக்கு அருவருப்பாக இருக்கலாம். ஆனால் கொசுக்களுக்கு அதுவே சொர்க்கம். அதுபோல், இரட்சிக்கப்படாத ஆத்துமாவுக்குப் பாவ வாழ்க்கை பழகிப்போய் விட்டது. பாவத்தின் வழியில் இன்பம் காண்பார்கள். பாவத்தின் நிலையில்லாத இன்பத்தில் புரளுவார்கள். அதன்முடிவு என்ன என்பதைப் பற்றி சிந்திக்க மாட்டார்கள். இந்த உலகத்தின் செல்வச் செழிப்பான வாழ்வு எத்தனை ஆத்துமாக்களைப் கெடுத்துப் போட்டது.! லூக் 16:19-31.

தூண்டில் போடப்பட்டிருக்கும் இறையை மீன் பேராசையுடன் தூண்டில் முள்ளைக் கூடக் கவனிக்காமல் அதிலுள்ள தீனியைக் கவ்விப் பிடிக்க முயற்சிக்கும் அப்படியே பாவ வாழ்க்கையில் உழலும் மக்களும் பாவத்தினால் விளையும் தீய விளைவுகளை உணராமல் மாட்டிக் கொள்-கின்றனர் பிசாசின் பிடியிலிருந்து அவர்களை விடுவிப்பது சிரமமான பணி.

பல ஆத்துமாக்கள் நற்செய்தியைக் கேட்கும்போது ஒருவகையான உணர்ச்சி வசப்படுவர். ஆனாலும் கசப்பான பிச்சிலும் பாவக் கட்டிலும் இருந்து விடுபடமுடியாமல் பின் வாங்கி விடுவர்.

ஆகையால் பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கம் தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாக சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்க

வேண்டும். 2 தீமோ 2:26 உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள். 2 தீமோ 1:14 புத்தியீனமும் அபத்தமுமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்கும் என்று அறிந்து அவர்களுக்கு விலகியிரு 2 தீமோ 2:23,

சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு. எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி கடிந்துகொண்டு புத்தி சொல்லு. ஏனென்றால் அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல் செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதனைகளைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு சத்தியத்துக்குச் செவியை விலக்கிக் கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகும் காலம் வரும்.

நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு. தீங்கனுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய். உன் ஊழியத்தை நிறைவேற்று 2 தீமோ 4:25. என்று தீமோத்தேயுவுக்கும் 'நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசி,(தீத்து 2:1.)நீயோ எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து எதிரியானவன் உங்களைக் குறித்துப் பொல்லாங்கு சொல்வதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத்தக்கதாக, உபதேசத்திலே விகற்பமில்லாதவனும் நல்லொழுக்கமுள்ளவனுமாயும் குற்றம் பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாயிருப்பாயாக' (தீத்து 2·7, 8.) என்று தீத்துவுக்கும் அறிவுரை கூறி, ஆலோசனை நல்கி பவுல் அப்போஸ்தலன் உற்சாகப்படுத்துகிறார். அவைகளை, விசுவாசித்துத் தியானித்து பொறுமையுடன் உறுதியாக நம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள இம் மாபெரும் பணியைத் தொடர்வோமாக.

## வாலிபப் பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினை

வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு. உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும். உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி.

நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும் உன் மாமிசத்திலிருந்து தீமையையும் நீக்கிப் போடு. இளவயதும் வாலிபமும் மாயையே.

நீ உன் வாலிபப்பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினை.

# 20-ஆம் நூற்றாண்டு ஊழியர்களுக்குப் பத்துகேள்விகள்

ஏதோ சில அற்புதமான முறைகளில் நம்மால் கி. பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த விசுவாசிகளை இப்பொழுது நம்முடன் பேச வைக்க இயலும் என்றால், நற்செய்தியைப் பரப்பும் நமது முயற்சிகளைக் குறித்து அவர்கள் என்ன சொல்லுவார்கள்? பேதுரு என்ன சொல்லுவார்? பவுல் நம்முடன் எப்படிப் பேசுவார்? பர்னபா அல்லது தீமோத்தேயு என்ன சொல்லுவார்? அந்த விசுவாசப் பக்தர்கள் நமது கர்த்தருக்குப் பின் இருபதாம் நூற்றாண்டில் வாழும் நம்மைச் சந்திப்பார்கள் என்றால் பின்வரும் கேள்விகளைப் போலக் கேட்பார்களா என்பதை நீங்கள் சிந்தித்து உண்மையாக ஆராய்ந்து பாருங்கள்.

1. ஒற்றுமை இல்லாமல் நற்செய்தி ஊழியத்தில் வெற்றிபெற முடியும் என்று நீங்கள் நம்புவது எப்படி? கொரிந்துவிலிருந்த திருச்சபைக்கு எழுதிய தமது திருக்கடிதத்தில், சகோதரர் பவுல் அத்திருச்சபையிலிருந்த பிரிவினையைத் தக்கவாறு குற்றஞ் சாட்டிக் கடிந்து கொள்ளவில்லையா? (ஒ. நோ. I கொரி 1:10-17; 3:1-9.)

2. இப்பொழுது உங்களுக்கு, இதற்கு முன்னர் ஒருபோதும் இல்லாத அளவுக்கு நல்ல போக்குவரத்து வசதி உண்டு. செய்திகளை அறிவிக்கும் வாய்ப்பு வசதிகளும் உண்டு. சுதந்தரமான நாடு உண்டு. இவ்வாறு இருக்கும் நிலையில் நீங்கள் உங்கள் வாழ்க்கையிலே இன்னும் அதிகமான ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த முடியாமற்போவது எப்படி? எங்களுக்கு அந்தக் காலத்திலே இத்தகைய வாய்ப்பு வசதிகளும் இல்லையே? இப்படி இருக்கும் போது நீயகள் ஏன் கர்த்தராகிய கிறிஸ்துவுக்காக அதிக ஆத்து-மாக்களை ஆதாயப்படுத்தவில்லை?

3. கிறிஸ்துவின் திருச்சபையின் அங்கத்தினர்கள் என்று தங்களை எண்ணிக்கொள்பவர்களைவிட உண்மையாய் கர்த்தரில் அன்பு கூர்ந்து, அவருக்காக வாழ்ந்து, அவருக்கு ஊழியம் செய்கிறவர்களின் சதவீதம் மிகக் குறைவாய் இருப்பது ஏன்?

4. பிரயோசனமில்லாத ஊழியக்காரர்களிலிருந்து பிரயோசனமுள்ள ஊழியக்காரர்களைப் பிரித்தெடுப்பதற்காக இயேசு பெரு-மான் வரும்போது உங்கள் நிலை என்ன? (மத். 25:14:30) அவர் வரும்போது கன்னிகைகளுக்கிடையிலேஒரு பிரிவினை உண்டாக்கப் படும். (மத். 25:1-13) நீங்கள் இக்காரியங்களை நம்புகிறீர்களா?

5. விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலும் எல்லா அதிகாரமும் உடைய கடவுள் திருமைந்தர் நசரேயராகிய இயேசு என்று நாங்கள் நம்புவதற்குரிய காரணத்தைவிட உங்களுக்குக் குறை-

வான காரணம் உண்டா? அப்படியில்லை என்றால், இயேசுவின் அதிகாரத்தை நாங்கள் மிகுந்த பொறுப்புடனும் சிரத்தையுடனும் எடுத்துக் கொண்டது போல நீங்கள் எடுத்துக்கொள்ளாதது ஏன்?

6. அக்கினி அவியாமலும் புழு சாவாமலும் என்றென்றைக்கும் இருக்கும் ஒரு கொடுமையான இடமாகிய நரகம் என்று ஒன்று உண்டு என்று நீங்கள் நம்புகிறீர்களா? (மாற்கு 9:43-49) அல்லது தனது பாவம் மன்னிக்கப்படாத ஒவ்வொருவருக்கும் அக்கினித் தழலில் கொடிய வேதனைப்படும் ''ஓர் இடம்'' இருக்கிறது என்னும் கருத்தை மறுத்துப் புறக்கணித்து விட்டீர்களா? (லூக். 16:19-31).

7. நடபடிகள் ஆகமத்தில் எங்கள் வெற்றியின் இரகசியத்தை நீங்கள் மறந்து விட்டீர்களா? நாங்களும் உங்களைப் போல பாடு உள்ள மனிதர்கள் தான். அவ்வாகமத்தை மீண்டும் படியுங்கள்

8. தங்களுக்கு எப்பொழுதும் கிடைக்கத்தக்க வல்லமையைப் பலரால் எப்படி இவ்வாறு மறந்து புறக்கணித்து விட்டு இருக்க முடிகிறது? (ஒ. நோ. ரோமர். 1:16) நாங்கள் மட்டும் தனித்து ஊழியம் செய்யவில்லை அல்லது எங்கள் சொந்த பலத்தால் நாங்கள் ஊழியம் செய்யவும் இல்லை. (ஒ. நோ. எபே. 3:14-21)

9. உங்களில் பெரும்பாலோர் நித்திய பேரின்ப வாழ்வு என்பதன் பொருளை மறந்து விட்டீர்களா? கடவுளின் திருக்கண்ணின் மூலம் நீங்கள் உங்கள் வாழ்க்கையை நோக்கிப் பார்க்கிறீர்களா? நித்தியத்தின் ஒளியில் காணும்போது இவ்வுலக வாழ்வு ''கொஞ்சகாலந்தோன்றிப் பின்பு தோன்றுமற்போகிற புகையைப்போலிருக்கிறதே.'' நாம் அழிவில்லாமல் நித்தியமாக வாழ்வோம் என்று நம்புவது இயலக்கூடியதா? உண்மையிலேயே எல்லா மனிதர்களும் நித்திய வாழ்வுடைய உயிர்களாக, அழிவில்லாத சாயலிலும், ஒத்த தன்மையிலும் உண்டாக்கப்பட்டவர்கள் அல்லவா?

10. ''பாவ சந்தோஷத்திற்கும்'' உண்மையான ''சந்தோஷத்திற்கும்'' இடையில் உள்ள வித்தியாசத்தை நீங்கள் ஆராய்ந்து உணர்ந்து இருக்கிறீர்களா? உலகம், தன்னுடைய மாம்சத்தின் இச்சையாலும், கண்ணின் இச்சையாலும், வாழ்க்கையின் பெருமையாலும் ''பாவ சந்தோஷத்தை'' சிற்றின்ப போகத்தை அளிக்கிறது. (ஒ. நோ. 1 யோவான். 2:15-17; எபி 11-24-29). ஆனால் இயேசு உண்மையான ''மகிழ்ச்சியை'' பேரின்பத்தைத் அவருக்கு ஊழியம் செய்கிறவர்களுக்கு அருளிச் செய்கின்றார் (ஒ. நோ. யோவான் 10:10) இப்படியிருக்க நாமே சாத்தானுக்கு கையாளாக, அவன் கொடுக்கும் உலக உல்லாசம் என்னும் கையூட்டுக்கு அடிமைகளாகலாமா?

# பாடுகள்—கிறிஸ்தவர்களுக்கு ஏன்?

''இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக் காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப் பார்க்கிலும் அதிக விலைபெறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கும் புகழ்ச்சியும், கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்.

அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்பு கூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லி முடியாததும், மகிமையால் நிறைந்ததுமா யிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களி கூர்ந்து, உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும இரட்சிப்பை அடைகிறீர்கள்''(1 பேதுரு 1:6-9)

ஆப்பிரிக்காவிலுள்ள இரண்டு வாலிபர்கள் வேதபாடங்களை வாங்கிப் படித்தார்கள். கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள். அவர்களுக்கு தாங்கள் அறிந்துகொண்ட கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது அவர்கள்...இரட்சிக்கப்பட்ட ஒரு மாதத்திற்குள்ளாகவே பக்கத்துக் கிராமங்களுக்குச் சென்று வசனத்தை சொன்னார்கள்; பிரசங்கித்தார்கள். அந்தக் கிராமத்து மக்கள் இவர்களை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக, இவர்கள் பிரசங்கிக்க ஆரம்பித்ததுமே அந்த கிராம வாசிகள் கோபங்கொண்டு இந்த இரண்டு வாலிபர்களையும் பிடித்து அடி அடி என்று அடித்தனர். கலகம் மூண்டது. வாலிபர்களின் துணிகளைக் கிழித்து நிர்வாணமாக துரத்திவிட்டார்கள். ஆனால் அந்த வாலிபர்கள் சோர்ந்து விடவில்லை. தங்களுக்கு வேத பாடங்களை அனுப்பிக் கொடுத்தவர்களிடம் நாங்கள் கிறிஸ்தவர்களாகி முப்பதே நாட்கள் தான் ஆகிறது. அதற்குள்ளாக தேவன் எங்களை இவ்வளவு கௌரவித்து, அவருக்காக பாடு அனுபவிக்கும் பாக்கியம் தந்தது ஏன்? என்று மகிழ்ச்சியோடு கேட்டார்கள்.

ஆம், கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்காக பாடு அனுபவிக்கிறார்கள். புதிய ஏற்பாட்டை நீங்கள் வாசிக்கும்போது, கிறிஸ்தவ வாழ்க்கைபாடுகள், துன்பங்கள் நிறைந்தவை என்பதை அறிந்து கொள்ளலாம். மிகப்பெரிய அப்போஸ்தலனும் புதியஏற்பாட்டில் அநேக புத்தகங்களை எழுதியவருமான பவுலின் வாழ்க்கை முழுவதும் பாடுகளும் விசாரணைகளும், வேதனைகளும் நிறைந்திருந்தது. தன் பாடுகளைப் பற்றி பிலிப்புவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு எழுதினார். ''ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல. அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது." (பிலி. 1:29)

கிறிஸ்துவுக்காய் பாடுபடுவது என்றால் என்ன என்பது பவுலுக்குத் தெரியும். பவுல் அப்போஸ்தலன் கர்த்தருடைய பெரிய ஊழியர்களில் ஒருவர். அப்படியிருந்தும் பாடுகளுக்கும் வேதனைகளுக்கும் அவர் விலக்கானவரல்ல. தன் பாடுகளைப் பற்றி நினைத்து கொரிந்து சபைக்குஅவர் "எவ்விதத்திலேயும் எங்களைத் தேவ ஊழியர்களாக விளங்கப் பண்ணுகிறோம். மிகுந்த பொறுமையிலும், உபத்திரவங்களிலும், நெருக்கங்களிலும், இடுக்கண்களிலும், அடிகளிலும், காவல்களிலும், கலகங்களிலும், பிரயாசங்களிலும், கண் விழிப்புகளிலும், உபவாசங்களிலும்......" (ii கொரி 6:3-6) என்று எழுதுகிறார்.

கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட மெய் கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் ஏற்படும் முதல் அனுபவங்களே பாடுகள் தான். தாங்கள் கொண்ட விசுவாசத்தைவிட்டு விலகச் செய்யும்படி சத்துரு எத்தனையோ வழிகளில் முயற்சிப்பான். கர்த்தர் உன்னைக் கைவிட்டு விட்டார் என்று எண்ணும்படியான அநேக சூழ்நிலைகளை உருவாக்குவான். நீ கிறிஸ்வதவனாகும் முன்பு மகிழ்ச்சியாய் இருந்தாய், ஆனால் கிறிஸ்தவனான பின்பு உனக்குப் பாடுகளும், துன்பங்களும் துயரமும் தான் என்று சொல்லுவான்.

தன் நிருபத்தை வாசிக்கும் மெய்க் கிறிஸ்தவர்கள், அநேக பாடுகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிந்து தான் பேதுரு இந்த நிருபத்தை எழுதுகிறார். அவர் குறிப்பிடும் முதல் பொருளே பாடு தான். கிறிஸ்தவர்கள் ஏன் பாடுப்படுகிறார்கள் என்பதை அவர் விளக்குகிறார். கிறிஸ்துவில் வைத்த விசுவாசம் சோதிக்கப்படும்போது ஏற்படும் ஆசீர்வாதங்கள் என்ன என்பதையும் குறிப்பிடுகிறார். இந்த வசனங்களை தியானிக்கும் போது சில எண்ணங்கள் நம் உள்ளத்தில் வருகிறது. நம் விசுவாசம் சோதிக்கப்படும் என்ற உண்மை; எந்தெந்த வழிகளில் விசுவாசம் சோதிக்கப்படும், விசுவாசம் சோதிக்கப்பட வேண்டியதன் காரணங்கள், சோதனை நேரங்களில் நமக்கு ஏற்படும் எண்ணங்கள், சோதனை மூலமாக இந்த உலகிலும், மறுமையிலும் கிடைக்கும் பலா பலன்கள், எல்லாம் இந்த வசனத்தில் அடங்கியிருக்கிறது.

### 1. விசுவாசம் சோதிக்கப்படும் என்னும் உண்மை.

கிறிஸ்தவர்கள் அடிக்கடி மறந்து போகும் ஒரு முக்கியமான உண்மை என்ன தெரியுமா? நாம் எப்பொழுதும் சாத்தானோடு யுத்தக் களத்தில் நிற்கிறோம் என்பதும், பாடுகளில்லாமல் யுத்தஞ் செய்ய முடியாது என்பதும் தான்! நாம் நமது பாவ வழிகளை விட்டு விட்டு கிறிஸ்துவண்டை வரும் போது சாத்தான் முழுக் கோபமாய் நம்மைத் தாக்குகிறான். அவன் கைவசத்திலிருக்கும் மற்றவர்களைப் பற்றி அவ்வளவு அக்கறைக் கொள்வதில்லை. ஆனால் யார் யார் இயேசுவை ஏற்றுக் கொள்கிறார்களோ, அவர்களோடு தான் அவனது யுத்தம்! அதனால்தான் சாத்தானின் போராட்டம் மெய்க் கிறிஸ்தவர்களிடம் அதிகமாயிருக்கிறது மற்றவர்களுக்கு போராட்டம் இல்லை அல்லது குறைவு.

பவுலடியார் எபேசியருக்கு எழுதும்போது, ''ஏனெனில் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமட்டுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப் பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு'' (எபே. 6:12). இது மிக முக்கியமான உண்மை. ஒவ்வொரு கிறிஸ்தவனும் இந்த வசனத்தை மனப்பாடமாகக் கற்றுக் கொள்ள வேண்டும். சோதனை வரும்போது மீண்டும் மீண்டுமாய் அதைச் சொல்ல வேண்டும். சாத்தானின் வேலை நம்மை அதைரியப் படுத்துவது தான். கர்த்தர் தமது வாக்குத்தத்தங்களில் உண்மையுள்ளவராக இல்லை. கர்த்தர் உன்னை கைவிட்டு விட்டார். நீ எதிர் நோக்கக் கூடிய எந்த மேன்மையையும் இல்லை என்று அவன் சொல்லுவான்.

பழைய ஏற்பாட்டிலுள்ள யோபுவின் சரித்திரத்தை இதற்கு நல்ல உதாரணமாகக் கூறலாம். சாத்தான் யோபுவினுடைய சகல சொத்துக்களையும் இழக்கும்படி செய்தான். யோபு தன் குமாரரையும் குமாரத்திகளையும் இழந்தான். கடைசியில் யோபு சுகபெலனை இழந்து பரிதாபமான நிலைக்கு வந்து விட்டார். புரிந்து கொள்வதற்கு கடினமாயிருந்தாலும் யோபு எப்படியாக தன் துயர நேரங்களில் பாடுகளையும் துன்பங்களையும் எதிர்நோக்கினார் என்றும், எப்படி கர்த்தர் அந்தப் பாடுகளின்மூலம் யோபுவை அதிகமாக ஆசீர்வதித்தார் என்றும் அறிந்து கொள்ளலாம்.

1 பேதுரு 5:8-ஆம் வசனத்தில், சாத்தான் எப்படி கெர்ச்சிக்கிற சிங்கம்போல யாரை விழுங்கலாமோ என்று வகை தேடுவதாக பேதுரு எழுதுகிறார். சோதனைகள் வரும் என்று வேதம் திட்டமாய் எச்சரித்தும் கூட அநேகர் சோதனை வரும்போது ஆச்சரியப்படுகிறார்கள். சங்கீதம் 42ஐ வாசிக்கும் போது எப்படி பக்தன், சோதனை நேரத்தில் தன் விசுவாசத்தை எல்லாம் இழந்த நிலைக்கு வந்து விட்டார் என்று அறிகிறோம். கிறிஸ்தவர்களாய் இருக்கிற நாம், சோதனைகளை எதிர்பார்த்திருக்க அறிந்துகொள்ள வேண்டும். அந்த நேரங்களில் கர்த்தர் என்னைக் கை விட்டு விட்டார் என்று எண்ணாமல், அந்த சோதனை மூலம் சாத்தான் சோதிக்கிறான் என்று அறிந்துகொள்ள வேண்டும்.

## 2 கிறிஸ்தவர்கள் சோதிக்கப்படும் பல வழிகள்:

பேதுரு, மெய் கிறிஸ்தவருக்குக் கொடுக்கும் ஆலோசனை என்ன? ''துன்பப்பட வேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக் காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்'' (1 பேதுரு 1:6) ''பலவிதமான சோதனைகள்" என்று பேதுரு குறிப்பிடுபவை யாவை?

**(அ) சரீரப் பாடுகள்:** கிறிஸ்தவனாயிருப்பதால் சரீரப் பாடுகளோ, கஷ்டங்களோ வராது என்று எண்ணிவிடக் கூடாது. கர்த்தர் நிச்சய-

மாகவே நம்மைப் பாதுகாப்பார். அவர் விருப்பப்பட்டால் அற்புதமான சுகத்தையும் தந்தருளுவார். ஆனால் அவர் தம் நோக்கப்படி சிலகாலம் சோதனைகளை அனுமதிக்கக்கூடும். அப்போஸ்தலனாகிய பவுலும் கூட தன் சரீரத்தில் இருந்த வேதனையைப் பற்றி "சரீரத்தில் ஒரு முள் என்றும்—அது தன்னைக் குட்டும் சாத்தானின் தூதன்" என்றும் குறிப்பிட்டார். அது தன்னை விட்டு நீங்கும்படி அவர் மூன்று முறை வேண்டிக் கொண்ட போதிலும் கர்த்தர் அதை நீக்கவில்லை. பவுல் அப்போஸ்தலன் அதைச் சொல்கிறார், "அது என்னை விட்டு நீங்கும்படிக்கு நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொண்டேன். அதற்கு அவர்: என் கிருபை உனக்குப் போதும்: பலவீனத்திலே என்பலம் பரிபூரணமாய் விளங்கும் என்றார்'' (ii கொரி 12:8). அவர் சரீர பலவீனமாய் இருக்கும்போது தேவபெலத்தில் சார்ந்து கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்தார். அவருக்கு இருந்த பெலவீனமோ, அல்லது சரீரத்திலிருந்து முள்ளோ, அவர் தன் மேலேயே சார்ந்து கொண்டிருக்காமல் தேவன் மேலேயே அவர் சார்ந்து கொள்ளும்படிச் செய்தது.

நம்மை தேவன்மேல் சார்ந்து கொள்ளச் செய்யும்படியாகவே சோதனைகள் வருகின்றன. சோதனை வருவதின் முக்கிய நோக்கங்களில் இதுவும் ஒன்று. எல்லாச் சூழ்நிலைகளிலும் நாம் கர்த்தர் மேலேயே சார்ந்து நம்பிக்கையுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். சரீரப்பாடுகளானாலும், நீடித்த வியாதியானாலும் தேவன் மேலே சார்ந்து கொள்வோமாக.

வியாதி மட்டுமல்ல; மெய் கிறிஸ்தவர்களை ''வறுமை'யும் கூட தாக்குகிறது. தேவனோடுள்ள அவர்களின் தொடர்பினால் அநேக முதலாளிகள் அவர்களை வேலையை விட்டு நீக்கி விடுகிறார்கள். அப்படிப் பட்ட சமயங்களில் நம்மைப் பராமரிக்க தேவன் போதுமானவராய் இருக்கிறார். ஆனால் நாம் முழுவதும் கர்த்தரையே சார்ந்து கொள்ள வேண்டும். கர்த்தர் நம்மை முற்றும் கைவிட்டார் என்று சொல்லக் கூடிய சூழ்நிலைகளும் வருவதுண்டு.

(ஆ) மரணம்: நேசித்தவர்களின் மரணமாகிய இழப்பு வருவதை எல்லாக் கிறிஸ்தவர்களும் ச கி த் து த் த ா ன் தீரவேண்டும். தேவன் தம்முடையவர்களை தன்னோடு சேர்த்துக் கொள்ளும்போது பிரிவால், தனிமையும் ஏற்படத்தான் செய்யும். கிறிஸ்தவர்களின் மரணத்தில் நம்பிக்கை உண்டு. சுதந்திர வீதத்தைப் பெற்றுக் கொள்ளத் தானே அருமையானவர்கள் கடந்து சென்றிருக்கிறார்கள்! என்றாலும் துயரம் இருக்கத்தான் செய்யும்.

(இ) உபத்திரவங்கள்: கர்த்தர் மேல் நாம் கொண்டுள்ள விசுவாசநிமித்தம் நாம் அநேக உபத்திரவங்களை அடைய வேண்டியதிருக்கிறது. அநியாயமாய் நம்மேல் குற்றம் சுமத்தி, நமக்கு விரோதமாய் அநேகர் செயல்படுவார்கள். சாத்தான் அநேகருடைய உள்ளங்களில் ஏவிவிட்டு

நம்மைப் பாடுபடுத்தவும், நமக்குள்ள நல்ல பெயரைக் கெடுக்கவும், நம்மைப்பற்றி அவதூறாக பேசவும் தூண்டிவிடுவான். சிலசமயங்களில் நமக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் புறஜாதிகளாயிராமல் நமக்குள்ளே, நம் சபைகளிலே உள்ள, பரிசுத்தமடையாத விசுவாசிகளாக கூட இருக்கக் கூடும். இவர்கள் வெளித் தோற்றத்திற்கு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களைப்போலக் காணப்பட்டாலும் உள்ளத்திலோ பெருமை, பொறாமை, பண ஆசை கோபம் நிறைந்து உண்மையாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களுக்கு விரோதியாயிருப்பார்கள்.

### 3. சோதனை வருவதின் காரணம்:

நம் விசுவாசம் சோதிக்கப்படும்படி கர்த்தர் ஏன் அனுமதிக்கிறார்? நம்மைத் தாக்குகிற பிசாசை விரட்டி, ஏன் உடனடியாக அவர் பாதுகாப்பு தரவில்லை? ஏன் நாம் தாழ்த்தப்பட்டு வறுமையிலே, நோயிலே, சிறையிலே' மரணத்தருவாயிலே வாட கர்த்தர் அனுமதிக்கிறார்? (அ) நம் விசுவாசம் உறுதியானதா என்பதை பரிசோதிக்க. (ஆ) நம் விசுவாசம் எவ்வளவு விலையேறப் பெற்றது என்று நிரூபிக்க. (இ) நமது விசுவாசத்தை புடமிட்டு, பரிசுத்தப்படுத்த.

**(அ) நம் விசுவாசம் உறுதியானதா என்பதை சோதனை பரிசோதிக்கிறது:** தாங்கள் கிறிஸ்துவின்மேல் வைத்திருக்கும் விசுவாசம் உறுதியானது, அது உண்மையாகவே கிரியை செய்கிறது என்பதை மெய்க் கிறிஸ்தவர்கள் சோதனைகள் மூலமாகவே உணர்ந்து கொள்கிறார்கள். சோதனை நேரங்களில் தாக்குப்பிடிக்க முடியாத விசுவாசம்போலியானது. அந்த விசுவாசத்தால் எந்த பிரயோசனமும் இல்லை.

இதை நான் விளக்கிக் காட்ட விரும்புகிறேன். நீங்கள் கேட்பதெல்லாம உங்களுக்கு கிடைக்கும்போது கர்த்தர்மேல் நம்பிக்கை வைப்பது எளிதுதான். நீங்கள் கிறிஸ்தவர்களான பின்பு பெரும் பணக்காரராகிவிட்டீர்கள் என்று வைத்துக்கொள்வோம். உங்கள் வாழ்க்கையில் எல்லாம் ஒழுங்கும் செம்மையாக நடக்கிறது, நீங்கள் கேட்கும் எல்லாம் உங்களுக்கு கிடைத்து வருகிறது. இந்தச் சூழ்நிலையில் எல்லாம் நன்மையாக கடக்கும்போது கர்த்தர்மேல் நம்பிக்கைவைப்பது மிகவும் எளிதானது.

அதே நேரத்தில், எல்லா நன்மைகளும் நம்மைவிட்டு எடுபடும் போதும் நாம் தேவனை நம்பவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். நமது வாழ்க்கையில் நன்மை ஏற்படுவதால் அல்ல; அவருக்காகவே அவரிடத்தில் நாம் நம்பிக்கை வைக்கிறோம். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசி சொல்லுகிறார். ,அத்திமரம் துளிர்விடாமற் போனாலும், திராட்சை செடிகளில் பழம் உண்டாகாமற் போனாலும், ஒலிவ மரத்தின் பலன் அற்றுப் போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற் போனாலும், கிடையில் ஆட்டு மந்தைகள் முதலற்றுப் போனாலும்

தொழுவத்திலே மாடு இல்லாமற் போனாலும்; நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்' (ஆபகூக் 3:17, 18)

தேவனுடைய எல்லா ஆசீர்வாதங்களின் அடையாளங்களும் போய்விட்டாலும், வாழ்க்கையில் எல்லாமே தலைகீழாக நடந்தாலும், நான் கர்த்தரை இன்னும் நம்புவேன். அவரில் மகிழ்ச்சியாய் இருப்பேன் என்கிறார். கர்த்தர் தான் நம் வாழ்க்கையில் முக்கியமானவர். அவர் தரும் ஆசீர்வாதங்கள் இரண்டாவது தான். நம் விசுவாசம் சோதிக்கப்படும்போது, மிக அதிகமாக நெருக்கப்படும் போது தான் உண்மையான விசுவாசத்தின் அளவு வெளிப்படும். நன்மைகளையெல்லாம் இழந்துவிட்டாலும், அவர்மேல் நம்பிக்கை இழக்காமல் இருக்கமுடியும்.

வாழ்க்கையிலுள்ள பெரிய மாயை என்ன தெரியுமா? நாம் தேவனை விசுவாசிக்கிறோம் என்று எண்ணியும், உண்மையில் அவரை விசுவாசியாதிருப்பதுதான். நாம் சோதிக்கப்படும் போது தேவனை உறுதியாய் பற்றிப்பிடிப்பதைத் தவிர வேறு வழியில்லை—நன்மையைக் கருதி அல்ல. நம் விசுவாசம் உண்மையும் உத்தமுமானது என்று உறுதிப்படுத்துகிறோம்.

**(ஆ) விலையேறப் பெற்ற விசுவாசம்:** அப். பேதுரு நம் விசுவாசத்தின் மேன்மையை பொன்னின் மேன்மையைக் காட்டிலும் மேன்மையானது என்று ஒப்பிட்டுப் பேசுகிறார். நமது வாழ்க்கையில் மிகவும் விலையேறப்பெற்றது விசுவாசம் தான். சோதனைக்குள்ளாகப் போகும் போதுதான் நமது விசுவாசம் பரீட்சிக்கப்படுகிறது. விசுவாசத்தின் மூலம் வல்லமையைப் பெற்றுக்கொள்கிறோம். முன்னேறிச் செல்ல அவை உந்தித் தள்ளுகின்றன. வாழ்க்கை வெறுமையும், வேதனையுமாக இருக்கும்போது தான் கர்த்தரண்டை திரும்பும் வாய்ப்பும் நமக்குக் கிடைக்கிறது. சங்கீதக்காரன் சொல்கிறார், 'நானோ தேவனுடைய கிருபையை என்றென்றைக்கும் நம்பியிருக்கிறேன்' (சங் 52:8)

வாழ்க்கையில் வரும் இருண்ட, வேதனையான பிரச்சனைகளுக்கெல்லாம் மேற்சொன்ன வசனம்தான் பரிகாரம். தேவன்மேல் நமக்கு விசுவாசம் இல்லாவிட்டால் ஒருபோதும் சோதனையை ஜெயிக்கவே முடியாது.

**(இ) விசுவாசத்தை சுத்திகரிக்கும் பாடுகள்:** சோதனைகளும் பாடுகளும் நம் விசுவாசத்தை அப்பியாசப் படுத்துகின்றன; வளரச் செய்கின்றன; சுத்திகரிக்கின்றன. பொன்னானது அக்கினியால் சோதிக்கப்படுகிறது. அழுக்குகள், தூசிகள் எல்லாம் வெப்பத்தால் நீங்கிப் போகின்றன அப்படியே நம் விசுவாசம் சோதிக்கப்படும்போது ஆவிக்குரிய குறைவுகள் நீங்கிப்போகின்றன. மேலும் கர்த்தர்மேல் அதிகமாய் சார்ந்துகொள்ளச் செய்கின்றன.

### 4. சோதனையின்போது நம் உள்ளத்தின் நிலைகள்:

ஆறும் வசனத்தை நாம் வாசிக்கும்போது, பாடுகளின் நேரங்களில் நமக்கு ஏற்படும் இரண்டு வகை உணர்ச்சிகளைப் பற்றிப் பேதுரு கூறுவ-வதை அறிகிறோம். 'இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்: என்றாலும்' துன்பப்பட வேண்டியது அவசியமானதால், இப்போது கொஞ்ச காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்.' இரண்டு காரியங்களைப் பேதுரு குறிப்பிடுவதைக் கவனியுங்கள். ஒன்று மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; அதே சமயத்தில் துக்கப்படுகிறீர்கள்.

கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் சோதனைகள் உண்மையாகவே மெய் மனஸ்தாபத்தைக் கொண்டு வருகின்றன. கண்ணீர் சிந்துகிறோம்! பாடுகளின் பாதையை விட்டு கிறிஸ்தவனை யாரும் தூக்கி விடுவதில்லை; மாறாக அவன் அந்தப் பாதை வழியாக கடந்து செல்லத்தான் வேண்டியதாயிருக்கிறது. 'மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் என்று தாவீது குறிப்பிடுகிறார் (சங்கீதம் 23.) அந்தப் பாதையிலிருந்து கர்த்தர் நம்மை எடுத்து விடாமல், நம் கரத்தைப் பிடித்து நம்மை வழி நடத்திக்கொண்டு வந்து விடுகிறார்.

பாடுகளின் பாதையிலே நாம் நடந்து வரும்போதுதானே, நாம் எதிர்பாராத அளவு மகிழ்ந்து களிகூருகிறோம். நம் விசுவாசம் மெய்யானது என்று எண்ணும் உணர்விலிருந்து வரும் மகிழ்ச்சி! நம் விசுவாசம் எவ்வளவு மேன்மையானது என்று நினைக்கும் நினைவிலிருந்து வரும் மகிழ்ச்சி! சோதிக்கப்பட்ட பின் பொன்னாக விளங்குவேன் என்ற நம்பிக்கையிலிருந்து வரும் மகிழ்ச்சி! யாக்கோபு சொல்லுகிறார், 'என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். (யாக் 1:2.)

கிறிஸ்துவுக்காக நம்மை நாமே தியாகம் செய்யும் காலம் சொற்ப காலம் தான். இந்தக் குறுகிய ஜீவிய காலத்தில் நம்மை நேசித்து நமக்காக பாடனுபவித்தவருக்காக நாமும் மகிழ்ச்சியோடு பாடனுபவிக்கிறோம். நாம் உலக வாழ்வை முடித்துவிட்டு நித்தியத்திற்குள் செல்லும்போது அங்கு பாடுகளோ, சோதனைகளோ அறவே இல்லை.

### 5. சோதனையினால் வரும் நன்மைகள்:

கிறிஸ்துவினிமித்தம் சோதனைகளை சகிப்பதால் உண்டாகும் இரண்டு நன்மைகளைப் பற்றி பரி. பேதுரு அப்போஸ்தலன் இந்த வசனங்களில் குறிப்பிடுகிறார்.

முதலாவதாக சோதனையை சகிக்கிறவர்களுக்கு, கிறிஸ்து வெளிப்படும்போது புகழ்ச்சியும், கனமும் மகிமையையும் உண்டாகும்.

கிறிஸ்து தமது மகிமையில் வரும்போது, தனக்காக பாடு அனுபவித்தவர்கள் யார் யார் என்று உலகம் அறியச் செய்து கனப்படுத்துவார் பாராட்டுவார்!

நாமெல்லோரும் பாராட்டுதலை விரும்புகிறோம். நாம் செய்த ஏதாவது நல்ல காரியத்திற்காக யாராவது நம்மை பாராட்டினால்; நாம் பூரித்துப் போகிறோம். ஒவ்வொரு குழந்தையும் தன் பெற்றோரின் பாராட்டுதலுக்காக ஏங்குகிறது. பரீட்சையில் நல்ல மார்க்குகளைப் பெற்றுத் திரும்பும் போது பாராட்டலை எதிர்பார்க்கிறான் மாணவன். ஒவ்வொரு முறையும் நாம் பாடுகளை சகிக்கும்போது, தேவன் எல்லாவற்றையும் நமது நன்மைக்காகவே செய்தருள்வார் என்று விசுவாசிக்கிறது மட்டுமல்ல, நாம் கிறிஸ்துவின்மேல் வைத்திருக்கும் அன்பையும் வெளிப்படுத்துகிறோம்.

தேவன் நம்மை பாராட்டுவதற்கு கிறிஸ்துவின் வருகை மட்டும் காத்திருக்க வேண்டும் என்பதல்ல. இதன் அர்த்தம்! பேதுரு அப்போஸ்தலன் சொல்லுகிறார். 'இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும், அவரிடத்தில் விசுவாசம் வைத்து சொல்லி முடியாததும், மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய் களிகூர்ந்து, உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும இரட்சிப்பை அடைகிறீர்கள்' (1 பேதுரு 1:8.) நேசத்தின் உச்சிதம் பாடுகளைச் சகிப்பதினாலேயே வெளிப்படுகிறது.

பாடுகளின் பாதையில் நடந்துவரும் ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தரை தன் மாம்சக் கண்களால் காணாவிட்டாலும் கூட, அவர் அருளும் மெய் சமாதானத்தை உணருகிறான், பாடுகளை சகிக்க பெலன் தரும் கர்த்தர் மேல் தன் முழு பாரத்தையும் வைத்துவிடு. தேவ பிள்ளையே, கிறிஸ்துவின்மேல் வைத்திருக்கும் விசுவாசத்திற்காக நீ பாடு அனுபவிக்கும் போது, அது நீ கிறிஸ்துவின் மேல் வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்த கிடைத்திருக்கும் பாக்கியம் என்று அறிந்து கொள்! கர்த்தர் எல்லாவற்றையும் உன் நன்மைக்காகவே செய்தருள்வார். இந்த இருண்ட பாதையின் வழிதான் மகிமையின் பரலோக ராஜ்யத்திற்குச் செல்லும் பாக்கியமான வழி.

ஐயோ! ஐயோ! ஐயோ

தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து, கசப்பைத் தித்திப்பும், தித்திப்பை கசப்புமென்று சாதிக்கிறவர்களுக்கு ஐயோ!

தங்கள் பார்வைக்கு ஞானிகளும், தங்கள் எண்ணத்துக்குப் புத்திமான்களுமாய் இருக்கிறவர்களுக்கு ஐயோ!

சாராயத்தைக் குடிக்க வீரரும், மதுவைக் கலந்து வைக்கப் பராக்கிரம சாலிகளுமாயிருந்து, பரிதானத்துக்காகக் குற்றவாளியை நீதிமானாகத் தீர்த்து, நீதிமானின் நியாயத்தை அவனுக்கு விரோதமாய்ப் புரட்டுகிறவர்களுக்கு ஐயோ!

# ருசித்துப் பாருங்கள்

"இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசி-பார்த்ததுண்டானால், சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும் வஞ்சனைகளையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப் பாலின் மேல் வாஞ்சையாய் இருங்கள்" (1 பேதுரு 2. 1-3)

ஒரு தடவை, வியட்நாமில் போர்புரிந்து கொண்டிருந்த அமெரிக்க வீரன் ஒருவனது அருகே ஒரு வெடி வெடித்ததால் வீரன் பலமாகக்-காயப்பட்டான். டாக்டர்கள் வந்து அவனை பரிசோதனை செய்தார்கள். அவனுக்குள் உயிர் இல்லை. நாடித்துடிப்போ, இரத்த ஓட்டமோ ஒன்றும் இல்லை. ஆனால் வைத்தியர்கள் அவனை விடாமல் இன்னும் 45 நிமிடங்கள் தொடர்ந்து உயிரோட்டம் ஏற்படுத்த முயற்சித்துப் பார்த்தார்கள். எந்த பலனும் இல்லை! கடைசியில் அந்த பிரேதத்தை பக்குவப்படுத்தி, அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்ல பிண அறைக்கு அனுப்பி விட்டார்கள். இரண்டு மணி நேரங்கள் கடந்தன. அந்த உடல் அழுகாமல் பக்குவப்படுத்தும் ஊசி ஒன்றை செலுத்த வந்த வேலையாள் இந்த பிரேதத்தின் கை இலேசாய் அசைவதைக் கண்டு டாக்டரிடம் ஓடிச்சென்று அறிவித்தான். விரைந்து வந்த டாக்டர்கள் அவன் சரீரத்தில் புதிதாக மெல்லிய நாடித்துடிப்பு அடிப்பதைக் கண்டு அவனுக்கு தீவிர சிகிச்சை அளித்து பிழைக்க வைத்தார்கள். இன்று அவன் நல்ல ஆரோக்கியமுள்ளவனாக அமெரிக்காவில் வாழ்ந்து வருகிறான்.

சிலவேளைகளில் ஒரு மனிதன் இறந்து விட்டானா அல்லது உயிரோடு இருக்கிறானா என்று கண்டுபிடிப்பது சிரமமாகி விடுகிறது. வெளித் தோற்றத்தில் நாடித் துடிப்போ, இரத்த ஓட்டமோ இல்லாததுபோல் இருப்பினும் உள்ளூர உயிர் இருக்கக்கூடும். எந்த விதத்திலும் உயிர்ப்பிக்கக் கூடாதபடி, தொடர்ந்து மரண நிலையில் இருந்தால்தான் இறந்து விட்-டார் என்று கூற முடிகிறது.

சாதாரணமாக, உயிரோடிருப்பவர்களையும், இறந்துவிட்டவர்-களையும் எளிதாக கண்டுபிடித்துவிடலாம். ஏனெனில் உயிரோடிருப்-பதற்கான அறிகுறிகள் எல்லா நாடுகளிலும் இந்தியாவானாலும், ஆப்பிரிக்காவானாலும், இங்கிலாந்தென்றாலும் எல்லாம் ஒன்றுதான். உயிரோடிருப்பவன் தன்னைச் சுற்றிலும் நடைபெறுபவைகளைக் கண்-காணிக்கிறான். அவனுக்கு பசி தாகம் எடுக்கிறது. அவன் சரீரம் அங்கும் இங்கும் அசைந்து வேலை செய்கிறது.

சரீரப்பிரகாரமாக நாம் உயிரோடிருக்கிறோமா என்பது அவ்வளவு முக்கியமல்ல; ஏனெனில் நாம் உயிரோடிருப்பது நமக்கே தெரிகிறது. ஆவிக்கேற்றபடி நாம் உயிருள்ளவர்களாய் இருக்கிறோமா என்பது தான் கேள்வி. இப்படிக் கேள்வி கேட்டுத்தான் சாத்தான் அநேகரை இடறப் பண்ணி விட்டான். நீ உயிரோடிருக்கிறாய் என்பதற்கு என்ன அத்தாட்சி இருக்கிறது? கர்த்தர் உண்மையாகவே உனக்குள் ஜீவிக்கிறாரா? கிறிஸ்து உன் பாவங்களையெல்லாம் மன்னித்து விட்டார் என்பது நிச்சயமா? என்றெல்லாம் கேள்விகேட்டு மெய்க் கிறிஸ்தவர்களை உருட்டிப் பார்ப்பான்.

சாத்தானின் தந்திரங்கள் புதிதானவை அல்லவே! அவன் சந்தேகங்களையும், பயங்களையும் விசுவாசியின் உள்ளத்தில் கொண்டு வந்து பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், தேவனின் இரக்கத்தையும் கேள்வி கேட்பான். அப்படி அசைக்க முடியாவிட்டால் தவறான நிச்சயங்களை காட்டுவான். இரட்சிக்கப்படாத சிலரை இரட்சிக்கப்பட்டுவிட்டதாக சொல்லுவான். இப்படிப்பட்ட தவறான அடையாளங்களைப் பற்றி இயேசுக் கிறிஸ்து முன்னமே எச்சரித்திருக்கிறார். "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்கிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள் அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்''

(மத் 7:21-23.

உண்மையிலேயே இந்த வார்த்தைகள் கலங்கப்பண்ணுகின்றன அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்யும் அநேக கிறிஸ்தவர்கள் உயிரற்றவர்களாக, இரட்சிக்கப்படாதவர்களாக இருக்கக்கூடும் என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார்! உயிருள்ளவன் என்பதற்கு அத்தாட்சி அவன் அற்புதங்களை செய்யக் கூடியவன்; தீர்க்கதரிசனம் உரைக்கக் கூடியவன் என்பது அல்ல பிசாசுகளை இயேசுவின் நாமத்தினால் துரத்துகிறவர்கள் எல்லாம் இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதல்ல. நியாயத்தீர்ப்பின் நாளன்று, கிறிஸ்தவர்கள் என்று பெயர் பெற்று, புகழ்பெற்ற அநேகர் புறக்கணிக்கப்பட்டுப் போவதைக் காண ஆச்சரியமாகஇருக்கும்!

இது முக்கியமான ஒன்று. ஆழமாக சிந்திப்போமாக! மேலே சொன்ன இந்த அடையாளங்களெல்லாம் ஒருவன் ஆவிக்குரிய ரீதியில் உயிரோடிருப்பதற்கு அத்தாட்சியாகா விட்டால், ஒருவன் உள்ளத்தில் கர்த்தர் இருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளுவது எப்படி?

ஆவிக்குரிய ஜீவியத்தில் உள்ள ஜீவனைக் கண்டுபிடிக்க அப். பேதுரு நான்கு முக்கியமான அடையாளங்களைக் குறிப்பிடுகிறார். முதலாவதாக நமக்குள் ஜீவன் இருந்தால் கிரியை இருக்கும். உதாரணமாக, அந்த அமெரிக்கா வீரன் செத்தவனுக்கு எண்ணப்பட்டாலும், அவன் கை அசைவதைக் கண்டு அவனுக்குள் ஜீவன் இருப்பதை உணர்ந்து கொண்டார்கள் அல்லவா? அப்படியே ஆவிக்குரிய ஜீவன் உங்களில் இருந்தால், நீங்கள் ''சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும் வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்து விடுவீர்கள்'' (1 பேதுரு 2:2). இது மட்டுமல்ல ஆவிக்குரிய பசி உங்களுக்கு ஏற்படும். ''புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாய்'' இருப்பீர்கள் (1 பேதுரு 2:3) ஜீவனில் மூன்றாவது அடையாளம் வளர்ச்சி. ''நீங்கள் வளரும்படி'' (1 பேதுரு 2:3) என்று பேதுரு குறிப்பிடுகிறார். நான்காவதாக ''கர்த்தர் தயையுள்ளவர் என்பதை ருசித்துப் பார்ப்பீர்கள்'' (1 பேதுரு 2:1).

**1. செயல்படு :**

ஜீவனின் முதல் அடையாளமே செயல்படுதல் தான். புதிதாய் பிறந்த குழந்தை கொஞ்சமும் அசையவில்லையானால் அது மரித்துப் போயிருக்கிறது என்றுதான் அர்த்தம். அந்தக் குழந்தை கை கால்களை அசைத்து அழுதால் அது உயிரோடு இருக்கிறது என்று உடனே கண்டு கொள்கிறோம்.

வியட்நாமில் யுத்தம் செய்த அந்த வீரனில் எந்த அசைவும் இல்லாததினால் அல்லவா அவன் மரித்துப் போனான் என்று மருத்துவர்கள் தீர்மானித்தனர்! அவனிடத்தில் அசைவு ஏற்பட்டவுடனே அவன் உயிரோடிருக்கிறான் என்பதை கண்டுபிடித்தனர்!

தேவ பிள்ளையே, உன்னில் ஆவிக்குரிய அசைவு இருக்கிறதா? சரீரப் பிரகாரமான அசைவுகளை வைத்து ஒருவன் ஆவிக்குரிய ரீதியில் உயிரோடிருக்கிறான் என்பதை உறுதிப்படுத்த முடியாது என்று இயேசுக் கிறிஸ்து நமக்கு எச்சரித்திருக்கிறார். பிரசங்கிப்பதோ, அற்புதங்களை செய்வதோ, தீர்க்கத் தரிசனம் உரைப்பதோ ஆவிக்குரிய அசைவு அல்ல! இவைகளை யார் வேண்டுமானாலும் செய்யலாம். ஆவிக்குரிய ஜீவனைக் கண்டுபிடிக்க இந்த பரிசோதனைகள் பயன் தராது.

பேதுரு ஜீவனின் அடையாளங்களை வரிசையாகக் குறிப்பிடுகிறார். முதலாவதாக, ஜீவனுள்ளவன் சகல துர்க்குணத்தையும் ஒழித்து விடுவான். துர்க்குணம் என்றால் மற்றவர்களைப் புண்படுத்தும் சுபாவம் என்று அர்த்தம். ஆனால் கிறிஸ்துவின் சிந்தையோ தவறு செய்தவனையும் மனதார மன்னித்து விடும் சிந்தை! ஒருவன் கிறிஸ்தவன் என்று தன்னை அழைத்துக் கொண்டு தன்க்குள் பகை, வைராக்கியம், கோபம் இவைக [illegible] ால் அவன் ஜீவனற்றவன்.

இரண்டாவது அடையாளம், சகலவித கபடத்தையும் ஒழித்துவிட்டு சத்தியத்தைக் கடைப்பிடித்தல். சத்திய ஆவியானவர் ஒருவனுக்குள் வாசமாய் இருக்கும்போது அவன் சகலவித பொய்களையும் வெறுக்கிறான் களைந்து விடுகிறான். மாய்மாலத்தையும் கபட்டையும் ஒதுக்குகிறான். அவன் ஏமாற்றுவதில்லை: திருடுவதில்லை. ஒருவேளை சில சமயத்தில் அவன் அந்த பழைய பாவத்தில் விழுந்தாலும், உடனே அதற்காக மனங்கசந்து, பாவமன்னிப்புப் பெற்றுக் கொள்கிறான்.

மூன்றாவது அடையாளம் சகலவித வஞ்சகங்களையும் ஒழித்து விடுவதாகும். வஞ்சகம் என்றால் இல்லாத ஒன்றை இருப்பது போல மாய்மாலம் பண்ணுவது. தன்னைப்பற்றி அளவுக்கதிகமாய் நினைத்துக் கொள்வது. நம்மிலே தவறு இருக்குமானால் ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு மன்னிப்பு பெறுவதே சிறந்தது.

நான்காவது அடையாளம் சகலவித பொறாமைகளையும் ஒழித்து விடுதலாகும். தேவன் உனக்குக் கொடுத்தவைகளில் திருப்திபடாத-படியால் பொறாமை ஏற்படுகிறது. மற்றவர்கள் உன்னைவிட மேம்பாடாக இருப்பதைக் காணும்போது பொறாமை ஏற்படுகிறது. தேவ-னுடைய பார்வையில் நாம் அனைவரும் சமத்துவமானவர்களே-அவரது பார்வையில் குலம், கோத்திரம் என்ற வித்தியாசங்கள் இல்லை-அவரே அனைவருக்கும் வரங்களையும், ஆசீர்வாதங்களையும் தந்தருளுகிறவர். நாம் திருப்தியடையாமல் முறுமுறுத்தால் உண்மையில் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்கிறோம். ஆவிக்குரிய ஜீவனில் அடையாளம் திருப்தியுள்ள உள்ளமாகும்!

ஐந்தாவது அடையாளம் சகலவிதமான புறங்கூறுதலையும் ஒழித்தல் ஆகும். புறங்கூறுதல் என்றால் மற்றவர்களைப்பற்றி அவதூறாக தூற்றித் திரிதலாகும், மற்றவர்கள் மோசமானவர்கள் என்றும், நான் தான் யோக்கியன் என்றும் காண்பிப்பதாகும். புறங்கூறுதல் உலகம் முழுவதும் நிரம்பியிருக்கும் ஒரு செயல். ஒருவனுக்குள் கிறிஸ்துவின் ஜீவன் இருந்தால் அவன் தன் அயலானை ஊன்றக் கட்டி எழுப்பவே பிரயாசப்படுவானே தவிர, வெட்டி வீழ்த்திவிட மாட்டான்.

மேற்சொன்ன ஐந்து செயல்களும் ஆவிக்குரிய ஜீவன் உள்ளிருப்-பதை பிரதிபலிக்கும் அடையாளங்களும், அத்தாட்சிகளுமாகும்.

ஆம் நண்பர்களே! தேவாதி தேவனுடைய அளவற்ற நன்மைகளை அனுதினமும் ருசிப்பதுதான் கிறிஸ்தவ ஜீவியத்தின் மேன்மை! இவ்-வுலகில் மட்டுமல்ல, நித்திய ஜீவ காலமாய் தேவஅன்பை ருசிக்க அவர் மகிமையைத் தரிசிக்க அழைக்கப்பட்டவர்கள் என்பதை மறந்து போகாதே!

நீ ஆவியில் ஜீவனோடிருக்கிறாயா? பேதுருவின் முறையை உப-யோகித்துக் கண்டுபிடி.

1. உன் வாழ்க்கையில் கிரியை உண்டா? சகலவித துர்க்குணத்தையும், கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், புறங்கூறுதலையும் ஒழித்து விட்டாயா?

2. வேத வசனத்தின் மேல் உனக்கு பசிதாகம் உண்டா? ஆவலாய் வாசிக்கிறாயா?

3. அவிக்குரிய ஜீவியத்தில் வளருகிறாயா? அதிக அன்பு, மகிழ்ச்சி, சமாதானம், இச்சையடக்கம் உன் ஜீவியத்தில் உண்டா?

4. தேவனுடைய தயவு காருண்யத்தை அதிகமாய், நீ ருசித்து முன்னேறுகிறாயா?

## இயேசுவின் சீடர்கள் பெயரும் மாற்றுப் பெயர்களும்

1. பேதுரு. இவருக்கு சீமோன் என்றும் (மாற்கு 1:16.) யோனாவின் குமாரனாகிய சீமோன் என்றும் (மாற்கு 16:17.) சிமியோன் அப் 15:14.) கேபா (யோவான் 1:42 ) ஆகிய மறு பெயர்களும் உண்டு.

2. அந்திரேயா யோனாவின் குமாரன் (யோவான் 1:40-42.)

3. யாக்கோபு, செபுதேயுவின் குமாரன் மத் 4:21.

4. யோவான், செபுதேயுவின் குமாரனும் யாக்கோபுக்குச் சகோதரனுமாவான் மத் 4:21. இடிமுழக்க மக்கள் என்னும் பெயரும் உண்டு.

5. பிலிப்பு லூக் 6:14

6. பர்த்தமேலேயு, இவர் தான் ஒரு வேளை நத்தானியேலாக இருக்கலாம் என்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர் (யோவான்1,45 )

7. தோமா, என்ற திதிமு (யோவான் 11:16.)

8. மத்தேயு, அல்பேயுவின் குமாரனாகிய லேவி என்றும் அழைக்கப்படுவார். மாற் 2:14.

9. யாக்கோபு. லூக் 6:15.

10. ததேயு, என்கிற லபேயு மத் 10:3. இவருக்கு யூதா என்ற மறுபெயரும் உண்டு, (லூக் 6-15)

11. சீமோன், என்னும் செலோத்தே லூக் 6-15.

12. யூதாஸ்காரியோத் மத் 10:4

YOUR ATTENTION PLEASE:

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The Voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 3815 New Delhi-110049.
Mondays-9:00to 9:15 P. M.
Fridays-7:45 to 8:00 P. M.

**HINDI**—Satya Susamachar-Speaker: Sunny David.
All correspondence should be sent to Satya-Susamachar, Post Box 3815, New Delhi-110049.
Tuesdays-9:00 to 9:15 P. M
Thursdays-9:00to 9:15 P. M.
Fridays-9:00 to 9:15 P. M.
Sundays-12:45 to 1:00 P. M.

**TELUGU**—The Voice of Truth-Speaker: Joshua Gootam
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 80, Kakinada-533001.
Sundays-2:30 to 2:45 P. M.
Tuesdays-2:30 to 2;45 P. M.
Thursdays-2:30 to 2:45 P. M
Fridays-2:30 to 2:45 P. M
Saturdays-2:30 to 2:45 P. M.

**TAMIL**—The Way of Truth-Speaker: P. R. Swamy.
All correspondence should be sent to The Way of Truth, Post Box 8405, Bangalore-560084.
Tuesdays-5:30 to 5:45 P. M.
Thursdays-6:45 to 7:00 P. M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM**—The Voice of Truth-Speaker: P. K. Varghese
All corespondence should be sent to Church of Christ Thevally, Quilon-9 (Kerala.)
Tuesdays-3:45 to 4:00 P. M.
Fridays-3:45 to 4:00 P. M.

**KANNADA**—The Voice of Truth—Speaker: Robert Rathnakar
Box No 448, Bangalore-560004
Sunday: 1-45 2-00 P. M.

ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed. Also the radio sermons are available in book form.

## வாசக அன்பர்களே!

திருமறை ஆசான் பிரதி மாதம் 20-ஆம் தேதி வெளிவருகிறது. 25-ஆம் தேதிக்குள் உங்களுக்கு வந்து சேராவிட்டால் தயவு செய்து எங்களுக்கு எழுதுங்கள். அனுப்புக் கொடுப்போம். கிடைக்கவில்லை என்று மனம் புழுங்கிக் கொண்டு மௌனமாக இருப்பதால் பயனில்லை. சில வேளைகளில் தபாலில் தவறிப்போய் இருக்கலாம். ஒத்துழைப்பீர்.

'இயேசுவின் வாழ்க்கை வரலாறு' சிறப்பு வகுப்புகளுக்கு உங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டீர்களா? விபரங்கட்கு தொடர்பு கொள்ளவும்.

— ஆசிரியர்

Published by Church of chirst and Printed bySri. vela E V. Rajamanickam at vela Printers, Erode-638 001. Phone: 74878
Editor. E. Z. Selvanayagam.

PRINTED BOOK-POST

TO
J. C. Choate
Post Box No. 3815
New Delhi 110 049

If undelivered please return to:
The Editor
THIRUMARAI AASAAN.
2, Manal Medu Street,
ERODE-638 002.